DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 01 / 2026 |
| Deposition of witness | : | PW-4 |
| Name | : | மணிகண்டன் |
| Father's /Husband Name | : | ஜெயராம் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 43 |
| Occupation | : | தலைமைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 2nd day March, 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2025ம் தேதி நன்னிலம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது 20.12.2025ம் தேதி அதிகாலை 2.45 மணி அளவில் இரண்டாம் நிலை காவலராக எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த ஆதவன் என்பவர் இரவு பாரா பணியில் இருந்தபோது காவல் நிலையத்திற்கு எதிரே வசிக்கும் ஆஜர் எதிரி அவரது குடும்பத்தினருடன் சண்டை போடும் சத்தம் கேட்டு காவலர் ஆதவன் எதிரியிடம் கேட்டதற்கு அதற்கு எதிரி அவரை போலிஸ் என்றால் பெரிய ஆளு புண்டையா என்று அசிங்கமாக பேசி பிரச்சனை செய்ததாகவும் அது பற்றி காவலர் ஆதவன் நிலைய ஆய்வாளரிடம் தகவல் தெரிவிக்க வேண்டி நிலையத்தினுள் அவரது செல்போனில் தகவல் தெரிவிக்க சென்றபோது ஆஜர் எதிரி அவரது வீட்டிற்கு சென்று ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு காவல் நிலையத்திற்கு உள்ளே நுழைந்து காவலர் ஆதவனை கத்தியை காண்பித்து நீ இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், 20.12.2025ம் தேதி காவல் நிலையத்திற்கு பணிக்கு சென்ற போது சம்பவம் பற்றி மற்றகாவலர்கள் கூறி கேள்விப்பட்டு அறிந்து கொண்டேன். இது பற்றி விசாரணை அதிகாரி விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u> :–**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் கதவை சாத்தினால் வெளியே இருப்பது தெரியாது என்றால் சரியல்ல. அது இரும்பு கதவு என்பதால் சாத்தினாலும் வெளியே இருப்பது தெரியும். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா1 எங்கள் காவல் நிலையத்தில் பணி செய்பவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் சிசி டிவி கேமரா உள்ளது என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***

District Munsif -Cum- Judicial Magistrate,

Nannilam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 01 / 2026 |
| Deposition of witness | : | P. W-5 |
| Name | : | சுப்ரமணியன் |
| Father's /Husband Name | : | முருகையன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 57 |
| Occupation | : | எலக்டிரீஷியன் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 2nd day March, 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

கடந்த 20.12.2025-ம் தேதி அதிகாலை சுமார் 02.30 முதல் 02.45 மணியளவில் நான் நன்னிலம் காவல் நிலையம் எதிரே உள்ள எனது வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது வெளியே ஒரே அசிங்கமான வார்த்தைகளால் சொல்லி ஆஜர் எதிரி சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். அதை பார்த்து காவலர் பணியில் நன்னிலம் காவல் நிலையத்தில் சீருடையில் இருந்த காவலர் ஆதவன் என்பவர் எதிரியிடம் சத்தம்போடுவதை பார்த்து கேட்டு காலையில் பேசிக்கொள்ளலாம் என்று சத்தம்போடாமல் செல்லும்படி கூறினார். அதற்கு ஆஜர் எதிரி ஆதவனை குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே என்று அசிங்கமான பேசினார். அதனால் நான் எனது வீட்டிற்குள் சென்றுவிட்டேன். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையொப்பத்தை கடந்த 20.12.02025-ம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில் நான் நன்னிலம் காவல் நிலையத்திற்கு அருகே இருந்தபோது போலிசார் சண்டை பிரச்சனை தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து என்னிடமும், சேகர் என்பவரிடமும் சாட்சிக்காக கையொப்பத்தை வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-**

எனது குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால்

சரிதான் ஆனால் சம்பவம் நடந்தது உண்மை. குழுவில் பணம் எடுத்தது தொடர்பாக எனக்கும், எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் நன்னிலம் காவல் நிலைய போலிசாருக்கு சமைத்து உணவு இன்று வரை வழங்கி வருகிறேன் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றாலும், நான் சொல்வது போல் எதிரி யாரையும் அசிங்கமாக பேசவில்லை என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த ஆவணத்தை படித்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல, படித்து பார்த்தேன். போலிசார் எனக்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***

District Munsif -Cum- Judicial Magistrate,

Nannilam.